# நிஹால் ஸ்ரீ அமரசேகர

***மிகச்சிறந்த பன்முகத்தன்மைவாய்ந்த தொழில்முறை ஆலோசகரும் ஆட்சி மற்றும் நீதிமுறைக்களுக்கமைய ஊழல் மற்றும் மோசடிகளுக்கு எதிராக போராடும் பொதுநல வழக்காளர்***



***கல்லூரிக்கால கல்வி***

*நிஹால் ஸ்ரீ அமரசேகர அவர்களை இலங்கையின் முன்னணி தனியார் பாடசாலையான பரி. தோமாவின் கல்லூரியில் ஒரு புத்திசாதூரியமான மாணவனாக திகழ்ந்ததுமன்றி அங்கே ஒரு மாணவத் தலைவனாகவும் இருந்தார். கல்லூரியின் ஆங்கில மற்றும் சிங்கள விவாதக் குழுக்களின் தலைவராக தலைவராக இருந்ததுடன் பிற கல்விசாரா செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கினார். மேலதிகமாக சிங்கள மற்றும் ஆங்கில இலக்கிய குழுக்களின் தலைவராகவும் குறிபார்த்து சுடுவதில் வல்லவராகவும் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் மாணவனாக யோகாசனத்தில் சிறந்தவராகவும் திகழ்ந்தார். அவரது பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சை பெறுபேறுகள் வரும்வரை அவர் க.பொ.த சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களுக்கு கற்ப்பிக்கும் ஆசிரியர் குழாமின் அங்கத்தவராக இருந்தார் .*

*இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கணிதம் மற்றும் பொருளியல் துறையின் பட்டப் படிப்பிற்கு அனுமதி கிடைத்திருந்த போதும் அவர் கல்வி சார் துறையில் தனது மேற்படிப்பை தொடராது தொழில்சார் துறையில் தொடர முடிவெடுத்தார். இதனால் கணக்கியலில் தனது தொழில்சார் கல்வியினை தொடருமுகமாக அவர் Ernst & Young (அப்போதைய Turguand Youngs) வரிவிதிப்பு, மற்றும் கணக்காய்வில் பயிற்றப்படவும் முகாமைத்துவ ஆலோசனை வழங்கல் மற்றும் தடயவியல் கணக்கியலிலும் அதிக கவனம் செலுத்தும் படிக்கும் பட்டய பயிற்சிக் கணக்காளராக இணைந்து கொண்டார். அவ்வாறே அவர் இந்தியாவின் மும்பாய் நகரில் கட்டுமானத்துறை மற்றும் உற்பத்தித்துறை சார் நிறுவனங்கள் கணனிமயமாக்கல் மற்றும் தகவல் செயல்முறை துறைகளிலும் பயிற்றப்பட்டார்.*

**தொழில்முறை சார் கல்வி**

*Turguand Youngs ல் பணியாற்றிய காலத்தில் பட்டயக்கணக்கு மாணவ ஒன்றியத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டதுடன் அனைத்து பட்டயக்கணக்காளர் நிறுவனங்களிலுமுள்ள பயிற்சிபெறும் மாணவர்களின் கொடுப்பனவுகள், வேலைநேரம், கல்வி விடுமுறை நாட்கள் என்பவற்றுக்கான தரநிர்ணயங்களை அறிமுகப்படுத்துவதற்கான வழிகளை உருவாக்குவதற்கு பொறுப்பாகவிருந்தார்.*


*1974ல் தனது தொழில்சார் பரீட்சைகளை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சிறந்த செயற்திறன் விருதையும் சிறப்புத் தேர்ச்சிக்கான சான்றிதழையும் பெற்று அந்நிறுவனத்தின் அங்கத்தவராக்கினார். அதே நேரத்தில் ஐக்கிய இராஜ்ஜியத்தின் பட்டயா முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் பரீட்சைகளில் வெற்றிகரமாக சித்தியெய்து அந்நிறுவனத்தின் அங்கத்துவத்திலும் உரித்தாகினார். 1975ல் இலங்கை அரசாங்கத்தினால் இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தில் ஆணைக்குழுவின் அங்கத்தவராக அமர்த்தப்பட்டார்.*

*அமரசேகர அவர்கள் புகழ்பெற்ற முகாமைத்துவ விரிவுரையாளராக இருந்தார். அவர் 1970இன் மத்திய காலப்பகுதியில் தன்னுடைய சொந்த கல்வி நிறுவனத்தில் தொழிற்சார் முகாமைத்துவம், கணக்கியல், மற்றும் வங்கித்துறைசார் பரீட்சைகள் என்பவற்றிக்கான பாட வகுப்புக்களை நடாத்தியதுடன் இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்திலும் முகாமைத்துவ விரிவுரைகளையும் நடாத்தினார்.*

*அவரது தொழிற்துறையின் பிற்காலப்பகுதியில் அவர் அவுஸ்திரேலிய பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினராய் இணைக்கப்பட்டதுடன் ஐக்கிய அமெரிக்காவின் உறுதிப்படுத்தப்பட்ட மோசடி ஆய்வு சங்கத்தின் அழைப்பின் பேரில் அதன் அங்கத்துவராக்கப்பட்டார்.*

*அத்தோடு அமெரிக்க சட்டத்தரணிகள் சங்கத்தின் அங்கத்தினரும் உலக ஊழலுக்கெதிரான அதன் விசேட படையணியின் உறுப்பினருமாவார். திரு. அமரசேகர அவர்கள் புகழ்பெற்ற தொழிற்சார் கல்வித்துறை விரிவுரையாளராக திகழ்ந்ததுடன் ஓர் சிறந்த பேச்சாளராகவும் தொலைகாட்சி நிகழ்ச்சிகளில் வெற்றிகரமாக பங்கெடுத்தவருமாவார்.*




**தொழிற்சார் வாழ்க்கை**

*அவர் தனது தொழிற்சார் வாழ்க்கையினை 1974ம் ஆண்டு தனியார் மற்றும் அரச துறையிலுள்ள வாடிக்கையாளருக்கு வர்த்தக மற்றும் முகாமைத்துவ ஆலோசனை சேவைகளை வழங்குவதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டு வாடிக்கைகையாளர்கள் குழுமங்களை பரந்த அளவில் உருவாக்கியவராய் ஆரம்பித்தார். அவரது தொழில்சார் பயிற்சிகள் வரையறுக்கப்பட்ட கோமின்ட் டக்ஸ் முகாமைத்துவ ஆலோசனை சேவைகள் என்ற பெயரிலும் ஆரம்பித்தார் பிற்காலத்தில் இது வரையறுக்கப்பட்ட கன்சல்டன்ட் 21 என அழைக்கப்பட்டது அத்தோடு அவர் நாடளாவிய ரீதியில் கணைக்காய்வு மற்றும் வரிவிதிப்பு சேவை நிறுவனத்தினைக் கொண்டிருந்தார். வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ ஆலோசனை வழங்களில் அதிக கவனம் செலுத்தும் பொருட்டு இந்நிறுவனத்தினை 1982ம் ஆண்டு KPMG Ford, Rhodes,Thronton &Co., என்ற பட்டயக் கணக்காளர் நிறுவனத்திடம் கையளித்தார் .*


*1977ல் இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனவினால் இலங்கை மருந்தக கூட்டுத்தாபனத்தின் நிர்வாக குழுவில் அங்கத்தவராக இணைக்கப்பட்டதுடன் 1980ல் இலங்கையின் போக்குவரத்து கூட்டுத்தாபனத்தின் நிதி முகாமைத்துவத்திற்கான உருவாக்கப்பட்ட விசேட நிர்வாக குழுவிலும் இணைக்கப்பட்டார். ஊதியங்களின்றி தன்னார்வமாய் இவர் ஆற்றிய சேவையினை இலங்கைக்கு வருகை தந்த பல சர்வதேச மதிப்பீட்டு நிறுவனங்கள் பாராட்டின. இவர் பல அரச கூட்டுத்தாபனங்களின் நிர்வாக குழுவில் பணியாற்றியதுடன் இலங்கையின் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆணைக்குழு உறுப்பினராகவும் காணப்பட்டார்.*

*HDL என அழைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட Hotel Developers Lanka கம்பெனியின் மேம்பாட்டாளருள் ஒருவராயும் பங்குதாரராகவும் நிர்வாகிகளில் ஒருவராகவும் 1987ல் இலங்கையில் திறந்து வைக்கப்பட்ட ஹில்டன் ஹோட்டல் பணித்திட்டத்தினை ஆரம்பித்து பணியாற்றினார். 1983 தொடக்கம் 1984 வரையான காலப்பகுதியில் வர்த்தக முகாமைத்துவ பிரிவில் முதல் பத்து செயல்திறன் மிக்க இளம் நபர்களுக்கான விருதினையும் பெற்றுக்கொண்டார்.*

*1989 தொடக்கம் 1994வரையான ஜனாதிபதிகள் ஆர்.பிரேமதாச மற்றும் டீ. பி. விஜேயதுங்க அவர்களின் காலப்பகுதியில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, கொள்கைத் திட்டமிடல் மற்றும் அமுலாக்கள் அமைச்சு மற்றும் போக்குவரத்து அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகராகவும் பணியாற்றினார். அரசதுறையின் மறுமலர்ச்சி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி போன்ற நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட தனியார்மயமாக்கல் மற்றும் உலக வங்கி, USAID, களினால் நிதி உதவி அளிக்கப்பட வேலைத்திட்டங்கள், அரச மற்றும் தனியார் சேவைகளின் கூட்டுறவு போன்றவற்றிக்கு தனது ஆலோசனை சேவை நிறுவனம் மற்றும் வாஷிங்டனை மையமாக கொண்ட அமெரிக்க ஆலோசனை நிறுவனத்துடன் இணைந்து மேற்கூறப்பட்ட வேலைத்திட்டங்களில் நீண்ட கால நிதியளிப்பிற்கான நிறுவன பொறிமுறையாக உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் முதலீட்டிக்கான செல்யலகம் ஒன்றினை தேசிய ரீதியில் அமைத்தார்.*

*1994ம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் திரு அமரசேகர அவர்களை நிதி மற்றும் திட்டமிடல் அமைசின் ஆலோசகராக நியமித்தார். மேலும் 2004ல் மீண்டும் அவர் திரு அமரசேகரவை பொது நிறுவங்களின் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவராகவும் வரையறுக்கப்பட்ட ஹோட்டல் டிவிலொபேர்ஸ் லங்கா வின் (HDL ) தலைவராகவும் நியமித்தார்.*

*அவர் 2014/15 ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவின் அரச நிதி முகாமைத்துவ கூட்டமைப்பின் நிர்வாக குழு உறுப்பினராக இருந்ததுடன் ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கெதிரான மாநாட்டின் (IAACA) தீர்மானங்களை ஊக்கப்படுத்துதல் மற்றும் அமுல்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட ஊழலுக்கெதிரான சர்வதேச அதிகாரிகளின் குழுவிலும் (IAACA) தனிப்பட்ட அங்கத்தவராக 2006ம் ஆண்டு அதன் தொடக்கம் முதல் காணப்பட்டார். 2011ல் இவர் ஐக்கிய நாடுகளின் போதைவஸ்து மற்றும் குற்றப் பிரிவின் (UNCAC) காரியாலயத்துடன் மிக நெருக்கமாக தொழிற்பட IAACA தொழிற்திட்டமிடலை உருவாக்கும் நிபுணர் குழுவில் ஓர் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இவ்வமைப்பு UNODC ன் தேசிய பகுதிகளின் அமுல்படுத்தும் பணிகள் தொடர்பான காரியங்களுக்கு பொறுப்பான செயலகமாகும். 2015ல் திரு அமரசேகர அவர்கள் IAACA ன் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டார்.*







ஒரு சிவில் சமூகத்தின் பொதுநல ஆர்வலராக திரு அமரசேகர அவர்கள் முன்னோக்கி செல்லும் காரணிகளை தழுவிக்கொண்டார். சில பொது மற்றும் ஜனாதிபதி தேர்தல்களில் பொது இடங்களில் சிறப்பான பங்களிப்பினை வழங்கியிருந்தார். தொழிற்சார் மற்றும் பொதுநல நோக்கமான தலைப்புக்கள் பலவற்றில் பேச்சளராக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெற்றிகரமாக பங்குகொண்டுள்ளார். இலங்கையின் அரச தொலைக்காட்சியிலும் *Eye Opener Talk Show* எனும் தனது சொந்த நிகழ்ச்சினியினை வழங்கியிருந்தார். இவை தேசிய மற்றும் பொது பிரச்சினைகள் தொடர்பானவையாகும்.


## 2007ம் இலக்க கம்பெனிகள் சட்டம்

திரு அமரசேகர அவர்கள் 2004ம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் கம்பெனிகள் சட்ட ஆலோசனைக்குழுவின் அங்கத்தவராக காணப்பட்டார். 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் உருவாக்களுக்கு காரணகர்த்தாவாகவும் இலங்கைப் பாராளுமன்றத்தினால் இது அமுல்படுத்தப்படவும் ஏதுவாயிருந்தார். அத்தோடு அபிவிருத்தி அடைந்த நாடுகளின் கம்பெனி சட்டத்திற்கு இணையாகவும் சட்டரீதியாக பங்குதாரரின் நடவடிக்கைகளுக்கான உரிமைகளை உள்ளடக்கியதாகவும் இச்சட்டம் காணப்பட்டது.




### விசாரணை அடிப்படையிலான வழக்குதொடுதலுக்குள் வருகையும் சர்வதேச எழுத்தாளராக உருவாகுதலும்

#### பிறர்சார்பான சட்ட நடவடிக்கை





- இலங்கையின் ஹில்டன் ஹோட்டல் கட்டுமானத்தின்போது வரையறுக்கப்பட்ட மிட்சுய் கம்பெனி டாய் சேய் கூட்டுத்தாபனம் மற்றும் கட்டட கம்பெனிகளான ஜப்பானின் கங்கோ கீகாகூ, செக்கிச்சா யோசோ சிபாட்டா ஆகிய கம்பெனிகளினால் நடைபெற்றிருந்த மோசடி நடவடிக்கையினை கண்டறிந்த போது 1990ம் ஆண்டு இவர் வழக்கு தொடுத்தலுக்குள்ளும் காலடி எடுத்து வைத்தார். ஒரு பங்குதாரராகவும் HDL ன் நிர்வாகியாகவும் திரு அமரசேகர அவர்கள் வெற்றிகரமாக இம்மோசடியினை கண்டறிந்து தனது முதலாவது பிறர்முகமான வழக்கு தொடுத்தலை, HDL ன் உரிமையாகவும் அதன் சார்பிலும் ஹில்டன் ஹோட்டலின் உரிமைக் கம்பெனியாக குற்றம் நடப்பதினை கட்டுப்படுத்தும் சூழ்நிலையிலும் இதனை முன்னெடுத்தார். இலங்கையின் இம்முன்னோடியான வழக்கானது ஜப்பானின் கம்பெனிகளால் HDL இனையும் இலங்கை அரசாங்கத்தினையும் மோசடி செய்ததன் அடிப்படையில் கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானத்தின் HLD ன் உத்தரவாதி என்ற முறையிலும் முன்னெடுக்கப்பட்டது. இவ்வழக்கிற்காக திரு அமரசேகர அவர்கள் இலங்கையின் முதன்மை வழக்கறிஞர்களான P. நவரட்ணராஜா QC, H .L. டி சில்வா PC மற்றும் K. கனக் -ஈஸ்வரன் PC ஆகியோருடைய சேவையை பெற்றிருந்தார் – (ஹில்டன் ஹோட்டல் கட்டுமானம் -இலங்கை அரசிற்கு எதிரான மோசடி -பாகம் 01-இலங்கையின் முதலாவது பிறர்சார்பான நடவடிக்கை)

- *1991ம் ஆண்டு மேலும் இவ்வாறன வழக்கொன்றை முன்னெடுத்தார்,அதாவது HDL இன் ஆய்வு செய்யப்பட்ட கணக்கு விபரங்களை உறுதிப்படுத்திய HDL இன் கணக்காய்வாளர்களான KPMG FORD,Rhodes, Thronton &CO HDL ன் நிர்வாகிகள் கூட்டாக இலங்கை அரசிற்கு எதிராகவும் பங்குதாரர்களுக்கு எதிராகவும் முன்னெடுத்த மோசடி நடவடிக்கைகளை மறைக்கும் முகமான முயற்சிகளின் போது இறுதியாக மேற்குறிப்பிட்ட கணக்கு நிறைவுக்கு வந்தபோது இலங்கையின் வர்த்தக மேல் நீதிமன்றமானது KPMG FORD,Rhodes, Thronton &CO பட்டயக் கணக்காளர் நிறுவனமானது HDL ன் கணக்காய்வாளராக இருப்பதிலிருந்து நீக்கப்படவேண்டும் எனவும் புதியதோர் கணக்காய்வு நிறுவனம் பணியமர்த்தப்பட்டு கணக்குகள் மீளாய்வு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும் எனவும் ஆணையளித்தது.*

- *இலங்கையின் உச்ச நீதிமன்றத்தின் மைல்கல்லான மேற்குறிப்பிட்ட பிரதான வழக்கின் தீர்ப்பானது 1992ன் பொதுநலவாய சட்ட அறிக்கையிலும் (வர்த்தக) குறிப்பிடப்பட்டிருந்தது. (1992) -LRC @636 அமரசேகர எதிர் மிட்சுய் கோ அன்ட் லிமிடெட் ) இலங்கையின் உச்ச நீதிமன்றமானது இது தொடர்பாக விமர்சன வடிவில் குறிப்பிட்டிருந்ததாவது, "இடைக்கால உள்ளீடுகளை அனுமதிக்க காரணமானது, பாரிய அளவில் அந்நிய செலாவானியானது HDL இடமிருந்தும் இலங்கை அரசிடமிருந்ததும் பறிக்கப்படுவதை தடுப்பதற்காகவும் அவ்வாறான பாரிய பணத்தொகைக்கு உத்தரவாதிகளாய் அரசு கட்டுப்பட்டிருப்பட்டிருப்பதாலும் அலட்சியமாக இருக்க முடியாது எனவும் திரு அமரசேகர அவர்கள் மிகவும் வலுவான வெளிப்படையாக விளங்கக்கூடிய ஆதாரங்களுடன் மோசடியினை உறுதிப்படுத்தி காட்டியதுடன் இவ்வாதாரங்கள் இலகுவாகவும் வெற்றிகரமாகவும் நிரூபிக்க கூடியதாகவும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.*

**மறுக்க முடியாத குற்றம்**




- *இதன் விளைவாக 1995ல் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் சிறப்பு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் உதவியுடனும் ஸ்தாபிக்கப்பட்டது. 24ன்கு பேர்களின் சாட்சிகளை பதிவு செய்ததுடன் தனிப்பட்ட 3 பட்டயக் கட்டிட வடிவமைப்பாளர்களின் அறிக்கையின்படி இலங்கை அரசுக்கு எதிராகவும் HDL ற்கு விரோதமாகவும் மோசடியில் ஈடுபட்டமைக்கான குற்றச் சாட்டின் பேரில் சில உயர்ந்த இடங்களிலிருக்கும் செல்வாக்கு செலுத்தக்கூடியாய் நபர்களுக்கு விளக்கமளிக்கும்படியான அழைப்பாணை விடுக்கப்பட்டது. இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டவர்களுள் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் காலத்தில் பிரதான ஆணைக்குழு உறுப்பினராகவும் டி.பி.விஜேயதுங்கவின் காலப்பகுதியில் அரசியலமைப்பு விவகார அமைச்சருமாயிருந்த பாராளுமன்ற உறுப்பினரும் HDL ன் நிர்வாகிகளில் ஒருவருமான கே.என் .சொக்சியும் உள்ளடங்குவார்*

- *முன்னதாக 1991ல் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் HDL னாலோ அல்லது இலங்கை அரசின் உத்தரவாதி என்ற பேரிலோ ஜப்பானிய வரையறுக்கப்பட்ட்ட மிட்சுய் நிறுவனத்திற்கும் டைசுய் கூட்டுத்தாபனத்திற்கோ எவ்வித கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளல் ஆகாது என இடைக்கால தடையுத்தரவு விதிக்கப்பட்டபோது, "இந்நபர்கள் சமூகத்தில் ஏற்படுத்தியிருந்த செல்வாக்கினை பயன்படுத்தி சரியான ஆய்வுகள் நடப்பதனை தடுத்து*


கொடுப்பனவுகளை பாதிக்கும்படி நடந்து கொண்டதுடன் கேள்விகள் எழாவண்ணம் வகைபார்த்துக் கொண்டனர். ஓர் குறித்த நிலையிலிருப்பவர் இது சரி என விபரித்தால், உண்மையில் இது கூட்டாக மேற்கொள்ளப்படும் ஒரு மோசடியாகும்" என குறிப்பிட்டிருந்தது.

- அதன்பின்பு இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேற்கொண்ட தலையீட்டில் இலங்கையின் கலைக்கப்பட்ட 2000ம் ஆண்டு கட்டிட வரைபு முக்கிய நிபுணர் ஒருவர் அப்போதைய எதிர்க்கட்சியான ஐ.தே.க.வின் செல்வாக்கு செலுத்தும் உறுப்பினர்களுள் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான கே.என் சொக்சி 2000ம் ஆண்டின் வரைபு யாப்பு பாராளுமன்றில் ஏற்றுக்கொள்ளப்பட எதிர்க்கட்சியின் ஆதரவை பெற்றுத் தருவதாக உறுதியளித்திருந்தார். எவ்வாறாயினும் அது நடைபெறவில்லை அத்தோடு அவ்வாறான அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ற சிறப்பு ஜனாதிபதி ஆணைக்குழுவின் பிடியாணை இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் முன்வைக்கப்படவில்லை இதன்மூலம் இவ்விசாரணை நடவடிக்கைகள் அதன் இறுதி கட்டத்தின் முற்றுப்பெற்றது.

- இவ்வாறாக வெளிக்கொணரப்பட்ட கூட்டு முயற்சி கலைக்கப்பட்டமைக்கு இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள், 2004ல் பொலிஸ் மா அதிபருக்கு குற்ற வழக்கு தொடரலை உடனடியாக ஆரம்பிக்கும்படி உத்தரவிட்டார். இருப்பினும் இம்முயற்சிகள் சட்ட மா அதிபர் சி.ஆர்.டி சில்வா வினால் முறியடிக்கப்பட்டிருந்தது. மறைமுக சமூக அரசியல் மற்றும் இராஜதந்திர செல்வாக்கினாலும் அழுத்தத்தினாலும் சிறப்பு ஜனாதிபதி ஆணைக்குழு முன் வெளிப்படுத்தப்பட்ட குற்றங்களுக்கான மறுக்க முடியாத ஆதாரங்கள் செல்லுபடியற்றதாக்கப்பட்டன.

- திரு அமரசேகர அவர்கள் இலங்கையின் பங்குபரிவர்த்தனை ஆணைக்குழுவில் புகார் கொடுத்திருந்தபோதிலும் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை அப்போதைய சட்டமா அதிபர் திலக் மாரப்பன அவர்களினால் இந்த ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் தமது சட்டபூர்வ கடமைகளிலிருந்து விலகியிருக்க செய்யப்பட்டிருந்தனர். - கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானம்- இலங்கை அரசிற்க்கெதிரான மோசடி பாகம் 02 வெளிப்பட்ட குற்றம் ஆயினும் துரோகத்தனமாக மூடி மறைக்கப்பட்டது.

**மோசடிக்கான தீர்வு**




- இலங்கையின் அப்போதைய பெரும்பான்மையான நிதியுதவியாளரான ஜப்பான் அரசின் அழுத்தத்தில், இராஜதந்திர செல்வாக்கின் விளைவாகவும் இலங்கை அரசின் அழுத்தத்தின் பேரிலும் திரு அமரசேகர அவர்கள் மேற்குறிப்பிட்ட வழக்கினை அப்போதைய சட்டமா அதிபர் (1995-1996) திலக் மாரப்பன அவர்களின் தீர்வு விதிமுறைகள் இணக்கப்பாட்டின் அடிப்படியில் நிறைவுக்கு கொண்டுவர சம்மதித்தார். இவ்விணக்கப்பாடானது பிற்காலத்தில் வந்த இலங்கையின் சட்டமா அதிபர்களாக சிப்லி அஸீஸ் மற்றும் சரத் என்.சில்வா ஆகியோராலும் சிறப்பு ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் அமைச்சரவை என்பவற்றால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

- திரு அமரசேகர அவர்கள் உத்தரவாதிகளான இலங்கை அரசு மற்றும் HDL இடமிருந்து வரையறுக்கப்பட்ட மிட்சுய் மற்றும் டைசுய் கூட்டுத்தாபன மோசடியாக கோரிய நிதித்தொகையிலும் 62% இணை 30.06.1995 இன்படி

தள்ளுபடி செய்யவேண்டும் என்ற அடிப்படையில் இவ்வழக்கினை நிறைவுக்கு கொண்டுவர இணங்கினார். இந்த தள்ளுபடி செய்யப்படவேண்டிய தொகையானது ஜப்பானிய யென் 17,586 மில்லியனாகவும் அமெரிக்க டொலர் 2017மில்லியனிற்கு சமமான தொகையாகும். மீதித்தொகையின் 38% ஆனது மேலும் 16 வருடங்களுக்குள் குறைந்த வட்டி வீதத்தில் செலுத்தப்பட மீள் அட்டவணைப்படுத்தப்பட்டது.

- 30.06.2016ற்கமைய மேற்குறிப்பிட்ட தள்ளுபடி பெறுமதியானது இலங்கை மத்திய வங்கியின் அனுமானித்த நிலையான வாய்ப்பு வீதத்தினடிப்படையில் 2.89 பில்லியன் ரூபாவாகும் அதேவேளை மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட மீதிக்கொடுப்பனவு தொகையானது 30.06.2016 இன்படி 51.3 மில்லியன் ரூபாவாகும். இலங்கை அரசானது திரு அமரசேகர அவர்களின் இம்முயற்சியானது தமக்கு பாரிய அனுகூலமாயிருந்தது என எழுத்து மூலமாக பாராட்டியிருந்தது.

- இருப்பினும் இலங்கை அரசாங்கத்திற்கும் HDL ற்கும் மேற்குறிப்பிட்ட தீர்வு ஒப்பந்தத்தை அமுல்படுத்த முடியவில்லை. அக்குறிப்பிட்ட தீர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக தொடரப்பட்ட ஓர் வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அப்போதைய நீதிபதி சி.வீ.விக்னேஸ்வரன் இனால் ஓர் கேள்விக்குரிய இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதாவது மேற்குறிப்பிட்ட மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட குறைக்கப்பட்ட மிகுதி தொகையினை வரையறுக்கப்பட்ட மிட்சுய் அன்ட் கோ விற்கும் டைசுய் கூட்டுத்தாபனத்திற்கும் தீர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொடுப்பனவை செலுத்த வேண்டும் என்றும் அவ்வொப்பந்தத்தின் ஏனைய சரத்துக்களை கட்டுப்படுத்துவதாகவும் அத்தீர்வு அமைந்திருந்தது. அதில் குறிப்பாக கூறப்பட்டிருந்த HDL ன் நிதிக்கட்டமைப்பினை மேலும் சீர்குலைத்தது. மேற்சொல்லப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பின் குறித்த தீர்வு ஒப்பந்தமானது 2014ம் ஆண்டு மே மாதம் முழுமையான அமுலாக்கத்திற்கு வந்தது.


- இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றின் அப்போதைய நீதிபதி சி.வீ.விக்னேஸ்வரன் 1998ம் ஆண்டு வழங்கிய முறையற்ற தீர்ப்பிற்கெதிராக உச்ச நீதிமன்றம் உடனடியாக விடுமுறை விடுத்தது.குறித்த இடைக்கால தடை உத்தரவானது அக்காலத்தின் நீதி அமைச்சரும் நிதித்துறை பிரதி அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் அவர்களின் தவறான வழிகாட்டல் மற்றும் செயற்படுகளினாலேயாகும். இவர் பாதுகாப்பு பரிமாற்ற ஆணைக்குழுவின் முன்னாள் அங்கத்தவர் என்றவகையில் மேற்குறிப்பிட்ட தீர்வு ஒப்பந்தத்தினால் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டவராவார். இதன்படி இவ்விருவரும் HDL ன் வீழ்த்தப்பட்ட பரிதாபகரமான நிதி நிலைமைக்கு காரணராகவும் உத்தரவாதிகளாகவும் பொறுப்புக் கூறல் வேண்டும்.

- உடனடியாக திரு அமரசேகர அவர்கள் நிதி அமைச்சரும் பிரதி அமைச்சருமான ஜி.எல்.பீரிஸிற்கு எதிராக சட்ட நடவடிக்கையினை எடுத்தார்.இதில் கேட்டகப்பட்ட கேள்விகளுக்கு விளக்கமளிக்கவோ சரியான ஆவணங்களை சமர்ப்பிக்கவோ ஜி.எல்.பீரிஸிற்கு இயலாமல் போனது. 2011ல் HDLன் அபாயகரமான நிதி நிலைமையினால் இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களும் நிதி அமைச்சர் அவர்களும் HDL இனை அரச உடைமையாக்கினார்கள்.

- HDL னை இலங்கையின் அரசியல் யாப்பிற்கு முரணான சொத்துக்களை அபகரிக்கும் ஒரு சட்டத்தின் மூலம் இலங்கை அரசாங்கத்தின் நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தம் வசப்படுத்தினார்.மறுபுறம் கம்பெனிகள் சட்டத்தின் பிரகாரம் HDL நிதியாண்மையில் மறுசீரமைத்தலை


செயற்படுத்துவதற்காக வர்த்தக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை பெற்று திரு அமரசேகர அவர்கள் குறித்த தீர்ப்பு தொடர்பான குறிப்பை இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகர் சமால் ராஜபக்ஸவிற்கு அனுப்பியும் இருந்தார். *(கொழும்பு ஹில்டன் கட்டுமானம்)*

**கடன் மீளப்பெறுகை மற்றும் சொத்து மீள்விற்பனை**




- *2003ம் ஆண்டு இலங்கை பாராளுமன்றத்தினால் சட்டமாக்கப்படவிருந்த வங்கிகளின் கடன் மீள் பெறுகை மற்றும் உடனடி செயன்முறை ஆகிய இரண்டு சட்டமூலங்களுக்கெதிராக அமரசேகர அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் தனது கூர்மையான சமர்ப்பிப்புகளை செய்தவேளை, உச்ச நீதிமன்றம் அந்த சட்டமூலங்களை தடை செய்ததுமல்லாமல் ஏலவே 1990ல் சட்டமூலமாக்கப்பட்டிருந்த இவ்விரு சட்டங்களின் மீதும் கடுமையானவை, அடக்குமுறைமையானவை மற்றும் அறிவுக்கொவ்வாத, இலங்கை அரசியல் யாப்பில் வழங்கப்பட்டுள்ள நீதியை அணுகுவதை தடை செய்கிறது, மற்றும் சட்டமென்பது பலமானவர்களை பலப்படுத்திடுவதாகவும் பலவீனமானவர்களை மேலும் வலுவிழக்க செய்வதாகவும் இருக்கக்கூடாது என பல கடுமையான கருத்துக்களை முன்வைத்திருந்தது. இலங்கையில் பிரமாணங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் நிறைவேற்றியவர்களுக்கெதிராக சவால் விடுப்பதற்கான முறைமை இல்லை. - வெளிப்படைத்தன்மை மற்றும் பொது கணக்கியல் நிதி முறையற்ற முகாமைத்துவம் மற்றும் பொது பொறுப்புக் கூறும் தன்மையில் உள்ள குறைபாடு தொடர்பான ஆய்வறிக்கை. IMF, WB, ADB இன் பார்வையின் கீழ் உள்ள ஓர் நாடாக இலங்கை.*

**விபரீதமான வரி பொது மன்னிப்பு**




- *2003ம் ஆண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் நிதியமைச்சரான சொக்சி அவர்களினால் கட்டமைக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட சூழ்ச்சிகரமான முறையில் வரி பொதுமன்னிப்பென்ற போர்வையில் இலங்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முற்றான பொது மன்னிப்பிற்க்கெதிரான போரொன்றை திரு. அமரசேகர அவர்கள் தலைமைதாங்கி நடாத்தினார். HDL மற்றும் இலங்கையரசிற்க்கெதிராக இடம்பெற்ற மேற்படி மோசடி மற்றும் அதனை மூடி மறைப்பதற்காக சொக்சி செயற்பட்ட விதங்களையும் கருத்திற்கொள்ளாது அவரின் நிதியமைச்சர் நியமனம் அமைந்தது.*

- *2004ம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா ஜனாதிபதியாக இருந்தபோது இலங்கை அரசியல் யாப்பின் 129து சாரத்தை முன்வைத்து இந்த விபரீதமான வரி பொது மன்னிப்பு சட்டமூலத்திற்கெதிராக இலங்கை உச்ச நீதிமன்றில் பொதுநல வழக்கொன்றை தொடுத்தார். மீண்டுமொருமுறை உச்ச நீதிமன்றில் ஆஜராகி தனது துல்லியமான வாதங்களை முன்வைத்ததன் விளைவாக குறித்த சட்டமூலமானது சட்ட அமுலாக்கத்திற்கு முரணானதும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளின் சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் உடன்படிக்கையை மீறும் ஒன்றாகவும் மேலும் அரசிற்கு மிகப்பாரிய அரச வருவாய்க்கு இழப்பை விளைவித்த ஒன்றாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அறிக்கைகளின்படி இந்த முடிவானது ஏறத்தாள 2 லட்சம் மில்லியன் அரச வருவாய் இழப்பை தடுத்தது.*


- *மேற்கூறப்பட்டதானது, 2004ல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் காலத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு மஹிந்த ராஜபக்சவின் புதிய அரசின் தெரிவிற்கும் காரணமாக அமைந்தது. புதிய அரசு பதவிக்கு வந்ததும் முதலாவது சட்டமூலமாக பாராளுமன்றத்தில் இலங்கையின் உச்ச நீதிமன்றத்தால் பொதுநலனுக்கு விரோதமானதும் சட்ட அமுலாக்கத்திற்கு விரோதமானதும் என தீர்ப்பளிக்கப்பட்ட கேள்விக்குரிய வரி பொது மன்னிப்பு சட்ட மூலத்தையும் மற்றும் பல முரணான பொதுமன்னிப்பு சரத்துக்களையும் இல்லாமல் செய்து திரு அமரசேகர அவர்களின் உதவியோடு உருவாக்கப்பட்ட வருமான வரிக்கு மட்டும் பொதுமன்னிப்பளிக்கும் ஒரு புதிய சட்ட மூலத்தை நிறைவேற்றியது. - வெளிப்படைத்தன்மை மற்றும் பொது கணக்கியல் நிதி முறையற்ற முகாமைத்துவம் மற்றும் பொது பொறுப்புக் கூறும் தன்மையில் உள்ள குறைபாடு தொடர்பான ஆய்வறிக்கை. IMF, WB, ADB இன் பார்வையின் கீழ் உள்ள ஓர் நாடாக இலங்கை.*

### பொது நிறுவன சீர்திருத்த ஆணைக்குழு

- *தொடர்ச்சியாக 2004ல் திரு அமரசேகர அவர்கள் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் பொது நிறுவன சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இதன்விளைவாக கடந்த காலத்தில் இடம்பெற்ற மோசமான தனியார்மயமாக்கல் நடவடிக்கைகள் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்ட போது அவை எதிரான விசாரணைகளுக்கு வழிவகுத்தன. பொது நிறுவனங்களுக்கான பாராளுமன்ற குழுவானது திரு அமரசேகரவின் உதவியோடு இவ்வாறான இரு தனியார்மயமாக்கல் குறித்து 2007ல் இலங்கை பாராளுமன்றத்தில் சட்ட விரோதமானதாகவும் மோசடியானதும் என அறிக்கை சமர்ப்பித்திருந்தது.*


- *இதனைத்தொடர்ந்து 2007ல் திரு அமரசேகர அவர்கள் இவ்விரு தனியார் மயமாக்கலுக்கும் எதிராக இரண்டு பொதுநல வழக்குகளை தொடுக்க ஏதுவாகினார். இதில் பொது நிறுவன சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் என்ற முறையில் பிரதிவாதியாக கருதப்படுவதால் இவ்வழக்குகளை பிறிதொருவர் பெயரில் தொடுக்கிறார். அவர் இலங்கையின் உச்ச நீதிமன்றத்தின் முன்பாக முழுமையான வாய்மூல மற்றும் எழுத்துமூல அறிக்கைகைகளை சர்ப்பிக்கும்படி தனிப்பட்ட முறையில் ஆஜரானார். இதனடிப்படையில் கீழே விபரிக்கப்பட்டுள்ள இவ்விரு தனியார் மயமாக்கங்கலும் மோசடியான முறையிலும் சட்ட விரோதமாகவும் நடைபெற்றது என்ற அடிப்படையில் அதனை இரத்து செய்யும்படியாக செய்தார்.*

### எண்ணெய் கிடங்குகளின் ஏகபோக உரிமை தனியார்மயமாக்கல் இரத்து




- *இலங்கை அரசின் துறைமுகத்தின் ஏகபோக உரிமையாக இருந்த எண்ணெய் கிடங்குகள் தனியார்மயமாக்கலின்போது இலங்கையின் முன்னணி தனியார் கூட்டுகுழுமமான ஜோன் கீல்ஸ் ஹோல்ட்டிங்ஸ் இற்கு ரூ 1200மில்லியனிற்கு தெளிவற்ற முறையில் விற்பனை செய்யப்பட்டது. இதன் பெறுமதி, கணக்கிடப்படும்போது அண்ணளவாக ரூபா.15000மில்லியன் எனவும் முக்கியமாக கொழும்பு துறைமுகத்தின் நிலப் பெறுமதி சட்டத்திற்கமைய விடுபட இயலாததாகும். IMF, WB, ADB, தனியார்மயமாக்கல் நியாயப்பத்திரம் - பாகம் 3 கொழும்பு துறைமுக தனியார்மயமாக்கல் உச்ச நீதிமன்றத்தால் சட்டவிரோதம் மற்றும் மோசடியானதொண்டென்ற அடிப்படையில் ரத்து செய்யப்பட்டது.*

***இலங்கை காப்புறுதி நிறுவனம் தனியார்மயமாக்கல் – இரத்து***




- *திரு அமரசேகர அவர்கள் இலங்கை அரசின் ஏகபோக சொத்தாக இருந்த லங்கா வைத்தியசாலையை (அப்போதைய அப்போல்லோ வைத்தியசாலை) தனக்கு கீழ் வைத்திருந்த இலங்கை காப்புறுதி நிறுவனமானது தனியார்மயப்படுத்தப்பட்டு கூட்டு நிறுவனங்களின் கம்பனியாக மாற்றப்பட்டதுடன் இதில் பிரபல வர்த்தக நிறுவனங்களான எய்ட்க்கேன் ஸ்பென்ஸ் மற்றும் இன்னும் பல நிறுவனங்களுடன் Gibraltar ல் பதிவு செய்யப்பட்ட ஒரு "ஆவி நிறுவனத்திற்கும்" 6050மில்லியன் ரூபாய்க்கு கொடுக்கப்பட்டு ரூபா 2100 மில்லியனை மீளப்பெறுகை தொகையாக பெற்றுக் கொண்டனர். ஆனால் இலங்கையின் உச்ச நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையான விலையாக ரூபா 26,000 மில்லியன் உள்ளதாக பதிவு செய்துள்ளார். தனியார்மயமாக்கல் IMF, WB, ADB ஆகியவற்றின் நோக்கம் பாகம் 4 இலங்கை காப்புறுதி நிறுவனம் தனியார்மயமாக்கல் இலங்கை உச்ச நீதிமன்றதால் சட்ட விரோதமானதாக கருதப்பட்டு இரத்து செய்யப்பட்டது.*


- *முரண்பாடான முறையில் இலங்கையின் சட்டமா அதிபர் சி.ஆர்.டி சில்வா மற்றும் திறைசேரியின் செயலாளர் P.B ஜயசுந்தர கேள்விக்குரிய முறையில் நாட்டிற்கு ஏற்படக்கூடிய பெரும் இழப்புக்களை தடுக்கும் வகையிலான இவ்விரு பொதுநல வழக்குகளையும் எதிர்த்தனர். இலங்கை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவும் இலஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழு என்பன இணைந்து மேற்கொண்ட இவ்விசாரணைகள் மாயமான முறையில் முறியடிக்கப்பட்டது. இது சமூக அரசியல் தாக்கங்கள் செல்வாக்குகள் மற்றும் அழுத்தங்களினாலேயாகும். இந்நிருபிக்கப்பட்ட மோசடிகளில் ஈடுபட்டோர் நீதியின் முன் குற்றவாளிகளாக தீர்க்கப்படாதது பெரும் கேவிக்குரிய விடயமாகும்.*

- *இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தனியார்மயமாக்கலானது Price WaterHouse Coopers மற்றும் Ernst & Young ஆகிய இரு பிரபல பட்டயக்கணக்காளர் நிறுவனங்களினால் கையாளப்பட்டது.இவர்களது நடவடிக்கைகள் இலங்கை நீதிமன்றத்தால் கண்டிக்கப்பட்டதுடன் Ernst & Young நிறுவனமானது இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளர் ஸ்தானத்திலிருந்து உச்ச நீதிமன்றத்தால் நீக்கப்பட்டது.இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் நெறிமுறைக்குழு மேற்கொண்ட விசாரணைகளும் அடக்குதலுக்குள்ளாகி நிறுத்தப்பட்டது.எவ்வித நடவடிக்கையும் இதன்பின் மேற்கொள்ளப்படாமையும் அரசியல் சமூக செல்வாக்கு போன்ற அழுத்தங்களினாலேயாகும்.*

***ஏற்றுமதி வருமானங்களை மீண்டும் தாயகம் திரும்பாமை***


- *பொது நிறுவனங்களின் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் திரு அமரசேகர அவர்கள் பரிவர்த்தனைகளின் கட்டுப்பாட்டாளர் 2004ம் ஆண்டின் 3ம் காலாண்டில் ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி வருமானம் 4ம் காலாண்டின்படி எவ்வாறிருந்தது என்பது தொடர்பான ஓர் தன்னார்வ கணக்கெடுப்பு ஒன்றினை முன்னெடுக்க ஏதுவானார். இக் கணக்கெடுப்பின்படி ஏற்றுமதி வருமானத்தின் 81% பகுதியே இலங்கைக்கு திரும்பியதோடு மிகுதி 19% ஆனது வெளிநாடுகளிலேயே தக்கவைக்கப்பட்டமை புலப்பட்டது.*

### உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் செயற்ப்பாடற்ற தன்மை





➢ இதன் விளைவாக திரு அமரசேகர அவர்கள் இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இறைவரை திணைக்களத்தின் சட்டங்களுக்கு அமைவாக சந்தேகத்திற்கிடமான இலஞ்ச ஊழல் நடவடிக்கைகள் சுங்க மற்றும் பங்குபரிவர்த்தனை குற்றங்கள் என்பவற்றை உரிய சட்ட அமுலாக்க அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்படவேண்டும் என இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகத்தினை வலியுறுத்த வேண்டி தமது கடமையை சரிவர செய்வதை வலியுறுத்தி ஒரு வழக்கு தொடரப்பட்டது. இலங்கையின் சட்டமா அதிபர் கே.சி. கமலசபேசன் ஆரம்பத்தில் இந்த தாக்கலை செய்ய இணக்கம் தெரிவித்தார்.இருப்பினும் அவரை தொடர்ந்து வந்த சட்டமா அதிபர்களான சி.ஆர்.டி சில்வா, மொஹான் பீரிஸ் மற்றும் ஈவா வணசுந்தர ஆகியோர் இவ்வாறான இதற்கு தமது ஆதரவை வழங்குவதில் காட்டிய தாமதமானது திரு அமரசேகர அவர்கள் தனது விண்ணப்பத்தை சில வருடங்களில் மீளப்பெற்றுக்கொள்ள காரணமாயின. - *வெளிப்படைத்தன்மையும் பொதுபொறுப்புக்கூறல் நிதி முகாமைத்துவமும் மற்றும் பொதுபொறுப்புக்கூறல் தன்மை தொடர்பான ஆய்வு – இலங்கை,IMF,WB, மற்றும் ADB யின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நாடு.*

### இந்திய எண்ணையின் வெற்றிகரமற்ற இராஜதந்திர அழுத்தம்




➢ பொது நிறுவனங்களின் சீர்திருத்த ஆணைக்குழு தலைவராக திரு அமரசேகர அவர்கள் அப்போதைய இந்திய உயர்ஸ்தானிகர் நிருபமா ராவ் அவர்களின் தலையீட்டினால் இலங்கை அரசாங்கத்திடம் எண்ணெய் வியாபாரத்தில் பெரும் இலாபம் ஈட்டிய இந்திய எண்ணெய் கம்பனி 9000 மில்லியன் ரூபாவினை (அப்போதைய பெறுமதியின்படி) மானியமாக கேட்டதினை கண்டித்தார். அமரசேகரவின் இந்நிலைப்பாடானது அப்போதைய சட்டமா அதிபர் கமலசபேசனினால் ஒப்புதலளிக்கப்பட்டதுடன் வேறு மானிய கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்ட்டதுடன் ரூபா 5000 மில்லியன் வரை மீட்கப்பட்டது. - *IMF,WB மற்றும் ADB ன் தனியார்மயமாக்கலின் நோக்கம் பாகம் 2, இலங்கையின் சந்தேகத்திற்குரிய ஒப்பந்தங்கள் - என்ற ஓர் முரண்பாடு*


### ஒதுக்கீட்டு சட்ட மூலம் மீதான சவால்





➢ 2008ல் திறைசேரியின் செயலாளர் P.B. ஜயசுந்தர அவர்களினாலும் இலங்கையின் அப்போதைய ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான மஹிந்த ராஜபசக்சவின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டமூலத்தினை உச்ச நீதிமன்றில் தனிப்பட்ட முறையில் ஆஜராகி ஆய்வு ரீதியான அறிக்கைகளை சமர்ப்பித்து அமரசேகர அவர்கள் வெற்றிகரமாக சவால் விடுத்தார். இலங்கையின் உச்ச நீதிமன்றமானது பொது நம்பிக்கை வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் இலங்கை அரசின் திறைசேரியின் பொறுப்பற்ற நிதி முகாமைத்துவத்தினை கண்டித்தது. இலங்கை யாப்பினடிப்படியில் கடன் பெறுதல் தொடர்பான முழுமையான வெளிப்பாடு கடன் சேவை மற்றும் செலவினங்கள் என்பன 2008ன் ஒதுக்கீட்டு சட்ட மூலத்தில் உள்ளடக்கப்படும் வகையில் திருத்தங்கள் இலங்கை பாராளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின் போது மாற்றியமைத்தலை உறுதிப்படுத்தல் வேண்டும் எனவும் ஆணையிட்டது.

*- வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறல் நிதிமுகாமைத்துவம் மற்றும் பொது பொறுப்புக்கூறல் தன்மை தொடரான ஆய்வு IMF, WB, ADB என்பவற்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நாடு இலங்கை.*

## அபாயகரமான எண்ணெய் ஹெட்ஜிங் ஒப்பந்தம்




- 2009ல் அமரசேகர இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நிவார்ட் கப்ராலினால் முன்வைக்கப்பட்டு திறைசேரியின் செயலாளர் PB ஜயசுந்தர வினால் ஒப்புதல் வழங்கப்பட்ட ஹெட்ஜிங் ஒப்பந்த்தினை இலங்கையின் உச்ச நீதிமன்றில் சவால் விடுத்தார். இவ் ஒப்பந்தங்கள் சிக்கலான ஒப்பந்தங்களாக "பிடிமானம் அற்ற ஒப்பந்தங்கள்" என்ற பிரிவில் வடிவமைக்கப்பட்ட சட்ட விரோத ஒப்பந்தங்களாகும். அரச ஊழியர்களை சமாளித்து இவ்வொப்பந்தங்களாவன ஐக்கிய இராஜ்ஜியத்தின் ஸ்டாண்டர்ட் சார்ட்டட் வங்கி அமெரிக்காவின் சிட்டி வங்கி மற்றும் ஜேர்மனியின் டாயிஷ் வங்கி ஆகியவை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இலங்கை பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட கூட்டுத்தாபன யாப்பில் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு அனுமதி இல்லை. அத்தோடு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமானது மேற்குறிப்பிட்ட வங்கிகளின் வாடிக்கையாளராக இருந்ததுடன் நட்டத்திலிருந்ததையும் நிதி நெருக்கடியிலிருந்ததையும் இவ்வங்கிகள் நன்கு அறிந்திருந்தன.


- ஐக்கிய இராஜ்ஜியத்தின் ஸ்டாண்டர்ட் சார்ட்டட் வங்கி அமெரிக்காவின் சிட்டி வங்கி மற்றும் ஜேர்மனியின் டொய்ஷ் வங்கி என்பன ஏற்கனவே சட்ட நடவடிக்கைகளாக முறையே ஐக்கிய இராஜ்ஜியத்தின் உயர் நீதிமன்றிலும் லண்டன் சர்வதேச நடுவர் நீதிமன்றிலும் உலக வங்கியின் அவதானிப்பின் கீழ் அமையும் அமெரிக்காவின் முதலீட்டு பிணக்குகள் விசாரணை மையத்திலும் முன்னெடுத்திருந்தன. திரு அமரசேகர அவர்கள் மேலதிகமாக இலங்கையிலும் உச்ச நீதிமன்றில் அதிகாரிகளை மேற்கோள் காட்டி சந்தேகத்திற்குரிய இவ்வழக்கை விசாரித்து நீதியளிக்க இலங்கையே சிறந்த இடம் என்ற அடிப்படையில் வழக்கு தொடுத்தார்.- *பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் இழப்புக்காப்பு ஒப்பந்தங்கள் சிட்டி வங்கி ஸ்டாண்டர்ட் சார்ட்டட் வங்கி டொய்ஷ் வங்கி சந்தேகத்திற்குரியது சட்ட விரோதமானது.*

- அமரசேகரவின் இவ்விரு பொதுநல வழக்குகளிலும் அப்போதைய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் இனால் கேள்விக்குரிய முறையில் "காலம் தாழ்த்தப்பட்டது" என்ற அடிப்படியில் கடும் எதிர்ப்பிற்குளானது. அத்துடன் அவர் உயர் நீதிமன்றில் வெளிநாட்டு வங்கிகளால் தொடுக்கப்பட்ட வழக்குகளை வெற்றிகரமாக பாதுகாப்பதாகவும் சகல செலவினங்களையும் மீட்டுத் தருவதாகவும் உத்தரவாதமளித்தார். இதன் விளைவாக அமரசேகர அவர்கள் இவ்விரு பொதுநல வழக்குகளையும் உச்ச நீதிமன்றில் தொடர்வதிலிருந்து தடுக்கப்பட்டார்.

- இலங்கையின் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸின் இக்கேள்விக்குரிய செயறப்பட்டாலும் நடத்தையாலும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஐக்கிய இராஜ்ஜியதின் உயர் நீதிமன்றில் ஸ்டேண்ட்ரர்ட் சார்ட்டட் வங்கியிடம் கேட்டிருந்த வட்டியுடனான 160 மில்லியன் அமெரிக்க டொலர் வழக்கில் தோல்வியுற்று அத்தோடு இலங்கை அரசிடம் டொய்ஷ் வங்கி கேட்டிருந்த வட்டியுடனான 60மில்லியன் அமெரிக்க டொலர் வழக்கில் அவ்வங்கி வெற்றியடைந்து 220மில்லியன் அமெரிக்க டொலரை அரசும் பொதுமக்களும் இழக்க நேர்ந்தது இதில் சட்ட மற்றும் இதர செலவுகள் சேர்த்து மொத்தமாக 1,200

*மில்லியன் ரூபாய்கள் செலவினம் ஏற்பட்டது. திரு அமரசேகர அவர்கள் தொடர்ச்சியாக பல புத்தகங்களை வெளியிட்டு வந்துள்ள அதேவேளை சரியான நேரத்தில் இந்த ஹெட்ஜிங் ஒப்பந்தம் தொடர்பிலும் அதனுடைய நியாயத்துவம் தொடர்பிலும் கேள்வி எழுப்பும் வகையில் புத்தகத்தினையம் வெளியிட்டுள்ளார். சிட்டி வங்கியின் வட்டியுடனான 195 மில்லியன் டொலர் கோரிக்கையை விசாரித்த மூவர் அடங்கிய லண்டன் சர்வதேச நடுவர் மாறானது ஐக்கிய இராஜ்ஜியத்தின் உயர் நீதிமன்றின் தீர்ப்பிற்கு எதிராக இவ்வகை நடவடிக்கைகளானது முற்றிலும் முரணானது என தீர்ப்பளித்தது.*

**சொத்துக்களை அபகரித்தல் சட்டத்திற்கு எதிரான வாதம்**





- *2011ம் ஆண்டு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்களினால் எந்தவொரு பொது விசாரணையுமின்றி இலங்கை அரசியல் யாப்பிற்கமைய அவசர சட்டமூலமாக பிரகடனப்படுத்தப்பட்ட சொத்து அபகரித்தல் சட்டத்திற்கு எதிராக திரு அமரசேகர அவர்கள் விடாமுயற்சியுடன் இலங்கை உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிட்டார். மிகவும் அவசரமாக அன்றைய சபாநாயகர் சமால் ராஜபக்ஷவினால் சட்டமூலமாக கைச்சாத்திடப்பட்டதும், மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் அவசர சட்டமாக கொண்டுவரப்பட்ட இந்த சட்டத்தின் மீதான வழக்கின்போது அப்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவினால் வழங்கப்பட்ட இந்த விசேட தீர்ப்பானது பல கேள்விக்குறிகளை எழுப்பியது, அவ்வாறான கேள்விக்குறிகளுக்கு நீதிமன்றின் நண்பனான இலங்கையின் அன்றைய சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் அவர்களினால் இந்த சட்ட மூலத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிராக கொடுக்கப்பட்ட நியாயங்களும் இந்த சட்ட மூலத்திலுள்ள கேள்விகளை மேலும் வலுப்பெற செய்தது . - சமூக அரசியல் உண்மைகள் - ஹில்டன் ஹோட்டல் தோல்வி மற்றும் சொத்து அபகரிப்பு சட்டம்*

- *இலங்கை அரசியல் யாப்பின் 123 (3) சரத்தின்படி அவசரமான எந்தவொரு சட்டமூலம் தொடர்பிலும் உச்ச நீதிமன்றம் சந்தேகம் ஒன்றினை வலுப்படுத்தினால் அத்தகைய சட்டமூலமானது இலங்கை அரசியல் யாப்பிற்கு முரணானதாகவும் அத்தகைய சட்டமூலத்தை நிறைவேற்றுவதிலிருந்து பாராளுமன்றம் விலகியிருக்கவும் வேண்டும் எனவும் வலியுறுத்துகிறது.*


- *மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் திரு அமரசேகராவின் முயற்சிகள் ஆரம்பத்தில் வெற்றிகரமாக அமைந்திருந்ததுடன்இ உச்ச நீதிமன்றின் நீதியரசர் குழு அவருடைய மனுவை ஏற்று பிரதிவாதிகளாய் பெயரிடப்பட்டிருந்தவர்களுக்கு அறிவிப்புக்களையும் வழங்கியிருந்தது. இதனை தொடர்ந்து அதே குழுவானது எழுத்து மூலமான சமர்ப்பிப்புக்களின் அடிப்படையிலான துல்லியமான நீண்ட வாய்மூல சமர்ப்பிப்புக்களையும் கேட்டதன் பின்னர் ஆரம்பத்திலே விசேட தீர்ப்பை வழங்கிய அதே குழுவே இதனை மீளாய்வு செய்ய வேண்டும் அதுவே உச்ச நீதிமன்றின் வழமை என தெரிவித்து அமரசேகரவினது வழக்கை தொடர அனுமதிக்கவில்லை.*


***பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப்பிரேரணையும் அகற்றலும்***





*திரு.அமரசேகர அவர்கள் தான் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு, தன்னுடைய வழக்கிற்கு சவாலான தீர்ப்பை வழங்கிய முதற் குழுவே விசாரிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்ததாகவும் பிரதம நீதியரசர் தான் பிறிதொரு குழுவை நியமித்ததாகவும் தெரிவித்த போது, அவரது வழக்கை விசாரித்த அந்த நீதியரச குழாமானது, பிரதம நீதியரசர் இந்த வழக்கை செவிமடுக்கும்படிக்கே கூறினாரேயொழிய இதனை தொடர்வதற்கு அனுமதியளிக்கவில்லை என தெரிவித்து அமரசேகர அவர்களின் வழக்கு தொடரலை முன்னெடுக்க அனுமதி மறுத்தது. அத்தகைய செயற்பாடானது இலங்கையின் பிரதம நீதியரசருக்கு ஏற்ற ஒன்றாக இருக்காத காரணத்தால், 2012ம் ஆண்டு அரசாங்கத்தினால் பிரதம நீதியரசரை நீக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட நகர்விற்கு வெளிப்படையாக தனது ஆதரவை தெரிவித்ததோடு, பல வெளிநாட்டு அரசாங்கங்களோடும் சர்வதேச முகவர்களோடும் நிறுவனங்களோடும் தொடர்புகொண்டு இந்த விடயத்தில் அடிப்படையிலான அவர்களது இடையீடு தொடர்பில் தனது அதிருப்தியையும் தெரிவித்தார். அரசியல், நீதி சட்டம் மற்றும் ஒழுங்கு / www.justification-for-supporting-the-impeachment-of-chief-justice.com*

***வெளியிடப்பட்ட மேலும்பல விசாரணைகள்***




*திரு அமரசேகர அவர்கள் பெறுமதிவாய்ந்த பெருந்தோட்டத்துறை உட்பட்ட மோசடியான ஊழல் நிறைந்த தனியார்மயமாக்கல்களிலும் மற்றும் பல கொடுக்கல் வாங்கலிகளில் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் விசேடமாக ஊழல், மோசடி, மற்றும் பொருளாதாரக் குற்றங்களை நோக்கமாகக் கொண்டும் முறையற்ற கையாள்கை மற்றும் வெளிப்படைத்தன்மையின்மை மேலும் அரசியல் அதிகாரத்தில் இருப்போரால் சட்டம் ஒழுங்கு சரியான முறையில் நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் பல்வேறு கட்டுரைகளையும் நூல்களையும் பொது நலன் கருதி வெளியிட்டுள்ளார். - IMF,உலக வங்கி,மற்றும் ADB இன் தனியார்மயமாக்கல் தொடர்பான நோக்கங்கள் - பாகம் 1 : இலங்கையின் பெருந்தோட்டத்துறை கொள்ளையடிப்பு, IMF,உலக வங்கி,மற்றும் ADB இன் தனியார்மயமாக்கல் தொடர்பான நோக்கங்கள்- பாகம் 2 : இலங்கையின் சந்தேகத்திற்குரிய ஒப்பந்தங்கள் - என்னவொரு முரண்பாடு !*




*அவர் இலங்கையின் முன்னணி வர்த்தக பெரும்புள்ளி ஒருவரின் வர்த்தக சாம்ராஜ்ஜியத்தினை விசாரணை செய்துள்ளார், இவ்வர்த்தகர் தனது தனிப்பட்ட அதிவேக விமானத்தில் மலேசியாவிலிருந்து இலங்கை வரும் வழியில் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளார், இதன் விளைவாக அவரது இறுதி உயில் இல்லாத நிலையில் அவரது வாரிசுகள் மத்தில் பெரும் பிணக்குகளை ஏற்படுத்தியதுடன் விசாரணைகள் மற்றும் வழக்குகளுக்கு வழிவகுத்தது. அமரசேகர உண்மையான உரிமையாளர்களின் விபரங்களை மறைத்து வைத்திருக்கும் வெளிநாட்டு சிக்கலான கூட்டுறவு கட்டமைப்புக்கள் மீது வெற்றிகரமாக தடயவியல் விசாரணைகளை வெளிநாடுகளின் வரி புகலிடங்களுக்கு சென்று அங்கே முதலிடப்பட்டுள்ள முதலீடுகளை கண்டுபிடித்து அறிக்கைகளினூடாக இலங்கை உச்ச நீதிமன்றில் அறிக்கைகளாக சமர்ப்பித்துள்ளார். உண்மையான உரிமையாளர்களை மறைந்தது வைத்திருக்கும் வெளிநாட்டு கூட்டுறவு கட்டமைப்புகள்- இலங்கை தொழிலதிபர்களின் வெளிநாட்டு வியாபாரங்கள்*

**தொழிற்முறை வெளிப்பாடு**




திரு அமரசேகர அவர்கள் தனியார் மற்றும் அரச துறைகளில் மிகச்சிறந்த பன்முகத்தன்மை வாய்ந்த அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நல்ல தொழிற்தகைமை கொண்ட சிறப்பான மூலோபாயாதவாதி ஆவார். தனியார் மற்றும் அரச துறைகளின் ஆலோசகராக முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், மீள்கட்டமைப்பு,தனியார்மயமாக்கல்,திட்ட விளம்பரம்,உட்கட்டமைப்பிற்கான தனியார் மற்றும் அரச பங்குடைமை, நிதி பொறியியல், வரிவிதிப்பு,ஆட்சி, பொருளாதார குற்ற விசாரணை,தடயவியல் கணக்கியல், வர்த்தக வழக்கு உதவி, பொதுநல வழக்கு போன்றவற்றில் அவரின் ஆழ்ந்த அறிவாற்றல் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அவரது பொது நலன் மீதான ஈடுபாடு, மோசடி,ஊழல்,பொருளாதாரக்குற்றங்களுக்கு எதிராக போராடும் குணாதிசயம் என்பன அவரது வாழ்க்கையின் அர்ப்பணிக்கப்பட்ட அங்கமாக காணப்பட்டதுடன், வறுமைக்கும் கிளர்ச்சிகளுக்குமான மூல காரணமாக பொது மக்களின் வளங்கள் கொள்ளையடிக்கப்படுவதை அடையாளம் கண்டுள்ளார்

**சர்வதேச வெளிப்பாடு**

சர்வதேச ரீதியாக பல்வேறு பயணங்களை இவர் மேற்கொண்டுள்ளார் அமெரிக்காவில் (வாஷிங்டன், நியூயார்க், பிலடெல்பியா, கனக்டிக்கட், மிசிக்கன், வெர்ஜினியா, மியாமி, நியூ ஓலேன்ஸ், லாஸ் ஏஞ்செல்ஸ், லாஸ் வேகாஸ், ஹவாலி அலாஸ்கா ) கனடாவில் (வான்குவார், கம்லூப்ஸ், பண்ப் லேக், லூயிஸ் ஜாஸ்பர் டொரோண்டோ,, மொன்டரல் கியூபெக் சிட்டி, ஆயிரம் தீவுகள்) பனாமா,பஹாமாஸ் (நாசாசு) பிரேசில் (ரியோ டீ ஜானேரியோ, குவாசு போல்ஸ், பரனா) பெரு (லிமா, கஸ்கோ, மாச்சு பிச்சு ) கோஸ்டா ரிக்கா (சான் ஜோஸ்) ஐக்கிய இராஜ்ஜியம் (லண்டன்,கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்ட், ஜெர்சி) நோர்வே (ஒஸ்லோ) டென்மார்க் (கோப்பென்ஹாம்) சுவீடன் (ஸ்டாக்கலாம்) பெல்ஜியம் (ப்ரசல்ஸ்) நெதர்லாந்து (ஆம்ஸ்ட்ராடம், ஹேக்) சுவிற்சர்லாந்து (சூரிச், ஜெனீவா ) பிரான்ஸ் (பாரிஸ்) இத்தாலி (ரோம், மிலான்) ஜெர்மனி (பெர்லின், பிராங்பர்ட்) செக் குடியரசு (பிரகுவே) ஆஸ்திரியா (வியன்னா) ஹங்கேரி (புடாபெஸ்ட்) உக்ரைன் (கீவ்) ரசியா (சென்.பீட்டர்ஸ்பெர்க், மொஸ்கோ) கிரீஸ் (ஏதென்ஸ்) மொரோக்கோ (மராகேஷ், காசாபிளாங்கா) ஸ்பெயின் (மாட்ரிட் ,பார்சிலோனா) மாலைதீவு (மாலே, பல்வேறு தீவுகள்) இந்தியா (நியூடெல்லி, மும்பாய்,, அஹமதாபாத், ஹைட்ரபாத்,பெங்களூரு, மைசூர, புட்டபர்த்தி, சென்னை, திருப்பதி, பாண்டிச்சேரி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம் ,கோயம்புத்தூர், திரிசூர், ட்ரிவான்றம், மதுரை, துதிகரின், திருநெல்வேலி, திருச்செந்தவூர், நாகர்கோவில், கன்னியாகுமாரி) பாகிஸ்தான் (கராச்சி) ஐ.அர .இரா.(டுபாய்) குவைத் எகிப்து (கைரோ, லக்சோர்) நேபாளம் (காத்மாண்டு ) தாய்லாந்து (பாங்காக்) மலேஷியா (கோலாலம்பூர்,பெனாங்,எபோ) சிங்கப்பூர் ,சீனா (பீஜிங், ஷங்காய், டாலியான், ஜினான், நான்ஜிங், தியான்ஜின், குனான், சங்ஷா, சாங் ஜியா ஜி, கொங் ஹாங் மகாவோ) இந்தோனேசியா (ஜகார்த்தா, பாலி) பிலிப்பைன்ஸ் (மனிலா) அவுஸ்திரேலியா (சிட்னி கான்பெரா மெல்போர்ன் பேர்த் ) நியூசீலாந்து (ஒக்லாந்து) தென் கொரியா (சியோல், பூசான் ) ஜப்பான் (டோக்கியோ கியோட்டோ, ஒசாகா, ஹிரோஷிமா ) தொழின்முறைசார் வேலையுடன் தொடர்புடையதாகவும், சட்டம் மற்றும் ஒழுங்கை அமுலாக்கள், ஊழல் மோசடிக்கு எதிராக போராடுதல் மற்றும் பொருளாதார குற்றம் போன்ற தலைப்புகளில் சர்வதேச மட்டத்திலான மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளிலும் இவர் பங்கெடுத்துள்ளார்.

***சர்வதேச எழுத்தாளர்***

*திரு அமரசேகர அவர்கள் 2010 மற்றும் 2013ம் ஆண்டு காலப்பகுதியில் ஊழல், மோசடி, மற்றும் பொருளாதார குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் அரச நிதி கையாள்கை, ஆட்சி சட்டம் ஒழுங்கு போன்றன தொடர்பில் இத்துறைகளில் உள்ள வல்லுநர்கள் மெச்சும் வகையில் முன்னேற்றகரமான புத்தக தொடர்களை வெளியிட்டுள்ளார். இந்த புத்தகங்களானது உலகளாவிய மட்டத்தில் அமெரிக்காவின் பென்குயின் குழுமத்தின் ஒரு கம்பெனியான AuthorsHouse நிறுவனத்தினால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுவதுடன் உலகின் முன்னோடி புத்தக சாலைகளிலும் மற்றும் இன்டர்நெட் விற்பனையாளர்களிடமும் கிடைக்கப்பெறுகின்றன. திரு அமரசேகர அவர்கள் இந்த புத்தகங்களை உலகின் பல்வேறு பாகங்களிலும் கொடுத்துள்ளதுடன் இவை அமெரிக்க காங்கிரஸ் நூலகம், வாஷிங்டன் டீ சி அங்கீகரிக்கப்பட்ட அமெரிக்க மோசடி பரீட்சையாளர்கள் சங்கம் டெக்ஸாஸ் அமெரிக்க கணக்கொப்புவிக்கும் திட்டம் வாஷிங்டன் டி சி ஐ.நா. நிருபர்கள் சங்கம் ஐ.நா. நியூயார்க் அமெரிக்க ஐ.நா சர்வதேச மோசடிக்கு எதிரான அகாடெமி வியன்னா ஆஸ்திரியா மலேசிய மோசடி எதிர்ப்பு அகாடெமி கோலாலம்பூர் மலேஷியா ஹாம்டர்டு பல்கலைக்கழகம் கராச்சி பாகிஸ்தான் சுயாதீன மோசடிக்கெதிரான ஆணைக்குழு ஹாங் ஹாங் பீஜிங் பொது வழக்கறிஞர் அலுவலகம் ஷாங்காய் பனாமா குவாட்டர் மொஸ்கோ ரஷ்யா உலக வங்கி புத்தக களஞ்சியம் வாஷிங்டன் டி சி மற்றும் சிங்கப்பூர் முகாமைத்துவ பல்கலைக்கழகம் போன்ற இடங்களில் இவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.*

*இவர் எழுதி வெளியிட்ட புத்தக தொடர்கள் அதிகளவிலான நிகழ்விகளின் ஆய்வுகள், அவற்றுக்கான சான்றுக்கான ஆவணங்கள், தரவுகள், மற்றும் தகவல்களை உள்ளடக்கியிருப்பதனாலும் , விசாரணைகள் மற்றும் ஊழல் மோசடி மற்றும் பொருளாதார குற்றம் தொடர்பான வழக்கு தொடுத்தல்கள் தொடர்பான கல்வியினை முன்னெடுப்போரின் நன்மைக்காகவும், அமரசேகர அவர்கள், இவ்வொவ்வொரு புத்தகத்தினதும் சாராம்சங்களையும் தொகுத்து பின்பதாக இச்சாராம்சங்களை பிரதானமாக சாதாரண வாசகர்களுக்காக ஆங்கிலத்தில் வெளியிட்டு, அதனை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்துள்ளார்.*







***தனிப்பட்ட வாழ்க்கை***

*இவரது மனைவி லீலாமணி மேற்கத்தேய மற்றும் இக்கீபான மலர் அலங்காரங்களில் மிக ஈடுபாடு கொண்டவர். மகன் தனஞ்சன ஒரு கட்டிட கலைஞர், என்பதுடன் அமெரிக்க கட்டிடக் கலைஞர் சங்கத்தின் ஒரு அங்கத்தவர் அத்தோடு அமெரிக்க யாலே பல்கலைக்கழகத்தின் கட்டிட கலை மற்றும் பொருளியல் பட்டதாரி ஆக இருப்பதுடன் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் விருதுகளுடன் கட்டிட கலையில் முதுநிலை பட்டதாரியுமாவார். மகள் தீக்ஷனா*

அமெரிக்க வாஷிங்டன் டி சீ பல்கலைக்கழகத்தின் வணிக முகாமைத்துவத்தில் பட்டதாரியாக இருப்பதுடன் ஹவாய் காபிலோனி கல்லூரியின் சிறப்புடன் ஹோட்டல் மற்றும் உணவு விடுதி நடவடிக்கைகளில் இணை பட்டத்தையும், போக்குவரத்து துறை முகாமைத்துவத்தில் ஹவாய் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியும் மற்றும் அமெரிக்க ஹோட்டல் மற்றும் மோட்டல் சங்கத்தின் மரியாதைக்குரிய பட்டத்தையும் பெற்றுள்ளார். மகன் சர்வஜனா தொழிற்துறை நடவடிக்கைகள் பொறியியலில் அமெரிக்க மிச்சிகன் பல்கலைக்கழகத்தின் சிறப்பு தேர்ச்சி பெற்ற பட்டதாரியும் மற்றும் தெற்கு கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் பொறியியல் முகாமைத்துவத்தின் முதுநிலை பட்டதாரியுமாவார்.

**சான்றுகள்**

# *வைத்தியர் லக்ஷ்மன் மாரசிங்க, ஓய்வு பெற்ற சட்ட துறை பேராசிரியர் விண்ட்சோர் பல்கலைக்கழகம், கனடா/ உள்ளாலய சட்டத்தரணி/ முன்னாள் இலங்கை சட்ட ஆணைக்குழுவின் தலைவர்*

# *ஏ.எஸ். ஜயவர்தன முன்னாள் ஆளுநர் இலங்கை மத்திய வங்கி/முன்னாள் நிதியமைச்சின் செயலாளர்/திறைசேரியின் முன்னாள் செயலாளர்/சர்வதேச நாணய நிதியத்தின் முன்னாள் தலைவர்.*

# *கே. கனக் ஈஸ்வரன் ஜனாதிபதி சட்டத்தரணி இலங்கை உச்ச நீதிமன்றம் லிங்கன் உள்ளகத்தின் சட்டத்தரணி ஐக்கிய இராஜ்ஜியம்*

# சான்றுகள்


දුරකථන / தொலைபேசி / Telephones :

සභාපති / தவிசாளர் / Chairman — 2872428

කොමසාරිස් / ஆணையாளர் / Commissioner — 2872428

ලේකම් / செயலாளர் / Secretary — 2872426

සහකාර ලේකම් / உதவிச் செயலாளர் / Assistant Secretary — 2872427

කාර්යාලය / அலுவலகம் / Office — 2872421

ශ්‍රී ලංකාවේ නීති කොමිෂන් සභා දෙපාර්තමේන්තුව

இலங்கையின் சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

DEPARTMENT OF THE LAW COMMISSION OF SRI LANKA

ෆැක්ස් / பெக்ஸ் / Fax — 2872426

මගේ අංකය / எனது இல. / My No.

ඔබේ අංකය / உமது இல. / Your No.

428/11, 3 වෙනි මහල, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.

428/11, 3ஆம் மாடி, டென்சில கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.

428/11, 3rd Floor, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla.

දිනය / திகதி / Date


**<u>ஆர்வம் உள்ளவருக்காக</u>**

*திரு. நிஹால் ஸ்ரீ அமரசேகர அவர்களை நான் பல வருடங்களாக அறிந்துள்ளேன், அதிலும் குறிப்பாக அவர், இந்நாள் எதிர்க்கட்சி தலைவரும், இன்டர்நேஷனல் டெமோகிராடிக் யூனியனின் பிரதி தலைவருமான ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தினை ஒரு பொது மன்னிப்பு சட்டம் தொடர்பாக (வருமானவரிபோது மன்னிப்பு எனும் போர்வையில்) சவால் விட தீர்மானித்ததன் பின்பதாக. இங்கே நிறைவேற்று அதிகாரத்திற்கு கட்டுப்படாத பாராளுமன்றத்தில்,சட்டங்களை மீறி பொது வருமானத்தில் வஞ்சித்த யாவருக்கும் ஒரு போர்வையான பொது மன்னிப்பு வழங்க எத்தனித்தது, இது வெறுமனே வருமான வரி மாத்திரம் அல்லாது , சுங்க மோசடிகள் மற்றும் தீர்வைகள், கலால் தீர்வைகள், அந்நிய செலாவணி மீறல்கள் என்பனவற்றினை உள்ளடக்கியிருந்தது. இப்பணியில் திரு அமரசேகர இச்சவாலின் சில பகுதிகளில் உதவும்படிஎன்னை வேண்டியிருந்தார், இச்சட்டமானது செல்லுபடியற்றதும் வெறுமையானதும் என்றும் இலங்கை அரசியலமைப்பிற்கு எதிரானது எனவும், தீர்ப்பானதில் அவர் வெற்றியடைந்தார். அத்துடன் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையினை இது மீறுவதாக அமைந்தது.*

*இதனைத்தொடர்ந்து திரு.அமரசேகரவும் நானும் அவர், பொது நிறுவனங்களின் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவராகவும், நான் இலங்கை சமாதான செயலகத்தின் (அப்போது ஐக்கிய நாடுகளிலிருந்து ஓய்வு பெற்ற திரு.ஜயந்த தனபாலவினால் தலைமைத்துவம் வகிக்கப்பட்ட )நீதித்துறைக்கு பொறுப்பான இயக்குனராகவும் இருந்த காலப்பகுதி முழுவதும் மிக நெருங்கிய தொழில்சார் உறவினை கொண்டிருந்தோம், இவ் அமைப்பானது இனப்பிரச்சினை தொடர்பாக தமிழ் புலிகள் இயக்கத்தோடு பணியாற்றும் படி கட்டாயமாக உருவாக்கப்பட்ட பிரதான அங்கமாக காணப்பட்டது. இக்காலப்பகுதி இரண்டு வருடங்களுக்கு மேலாக காணப்பட்டது. திரு.அமரசேகர சமாதான செயலகத்தோடு ஒருங்கிணைந்து பணியாற்றி MIGA இன் உருவாக்களுக்கும் (உலக வங்கியின் கூட்டு அங்கம்) இலங்கையின் மோதல் காணப்பட்ட பகுதிகளான வடக்கு மற்றும் கிழக்கில் முதலீடுகளை ஊக்குவிக்க உத்தரவாதியாயும் இருந்தார்*

*இந்தக் காலப்பகுதியில், திரு.அமரசேகர கொழும்பு துறைமுகத்திற்கு வரும் கப்பல்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பதுங்குகுழி வசதிகளை வழங்கிவரும் சிங்கப்பூர் கம்பெனி ஒன்றின் ஒழுக்கமற்ற நடவடிக்கைகள் குறித்து கண்டறிகின்றார். இக்கம்பெனியினை நடுவர் தீர்ப்பிற்காக இணைத்தார், இதில் நானும் ஒரு மத்தியஸ்தராக பணி புரிந்தேன். இம்மத்தியஸ்தம்,திரு.அமரசேகரவுக்கு இருந்த, இலங்கை பெட்ரோலியக்கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவரது கையொப்ப மோசடி உட்பட்ட, பல சந்தேகங்களை வெளிக்கொண்டுவந்தது. சிங்கப்பூர் கம்பெனிக்கு எதிராக சில கட்டணங்களை அறவிட்டிருந்தோம், தொடர்ச்சியாக இந்த சிங்கப்பூர் கம்பெனி மாயமாய் மறைந்ததுடன், மத்தியஸ்தத்தில் விடுக்கப்பட்ட கட்டணங்களை செலுத்த கண்டுபிடிக்க இயலாமல் போனது.*

*இந்திய நீதிமன்றங்களைப் போலல்லாது இலங்கை நீதிமன்றங்கள், பொதுநல வழக்குகளை (P.I.L) அடையாளம் காணவில்லை திரு அமரசேகர ஈடுபட்டிருந்த அண்மைக்கால வழக்கில், நிதி ஒதுக்கீட்டு மசோதாவின் சில பகுதிகள் அரசியல் யாப்பிற்கு பாதகமானது என்ற அடிப்படையில் சட்ட மா அதிபருக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுத்தார். இதற்கமைய இவர் உச்ச நீதிமன்றத்தின் முன் நிதி ஒதுக்கீடு மசோதாவின்சில அம்சங்கள் நாட்டின் அரசியலமைப்பிற்கு ஒவ்வாதவை என வாதிட்டார். இந்நடவடிக்கைகளை அவர் முன்னெடுத்ததன் பின்பாக வேறு 8 தரப்பினர் இவருடன் இம்மனுவிற்கு ஆதரவாக இணைந்துகொண்டனர். திரு.அமரசேகரவின் சொந்த நடவடிக்கையினை மேற்கொள்ளும் உரிமையிலடிப்படையிலான வழக்கானது, அரசியல் யாப்பின் 28 வது பிரிவின் படியாகும் (இலங்கைநீதிமன்றத்தில் இதற்கு முன் எவ்விதத்திலும் இப்பிரிவு பயன்படுத்தபடவில்லை.) இதனை வாதாடிய வேளை பொதுமக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு உரிமையினை பெற்றுத்தந்தது.*

*இது பொது நல வழக்குகளை ஆதரித்த இலங்கையின் நீதித்துறையின் முன் எதிர்வுகூறலின் ஒரு அங்கமான வேண்டுதலாக காணப்பட்டது. பிரதம நீதியரசர் திரு.அமரசேகரவை தனது மேசையிலிருந்து வாதாடும்படி அழைத்து அவரை ஊக்குவித்தார். இது இலங்கையின் நீதித்துறையின் முன் எதிர்வு கூறலாக பொது நல வழக்கினை அறிமுகப்படுத்த உச்ச நீதிமன்றத்தினை இணங்கச்செய்ததாகவோ அல்லது உச்ச நீதிமன்றம் திரு.அமரசேகரவை பொது ஒழுங்குகளுக்கான காவலனாக அவர் இலங்கையின் சமுதாயத்திற்கும் தேசத்திற்கும் பாதுகாவலாக இருந்ததனை பாராட்டும் வண்ணமாகவும் அமைந்தது என கருத்தில் கொள்ளப்படலாம். இதில் எந்த விளக்கத்தினையும் திரு.அமரசேகர பெருமிதம் அடைவதற்கான காரணமாக கருத்தில் எடுக்கலாம். 2007 அக்டோபர் 11 இல் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படமுன்னர் மனுவினை ஆராயும் பணியில் நானும் பங்கெடுத்திருந்தேன். பாராளுமன்றத்தின் கௌரவ சபா நாயகரிடமான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்பார்க்கப்பட்டது.*


*முன்பதாக திரு.அமரசேகர தனிப்பட்ட முறையில் உச்ச நீதிமன்றத்தின் முழுமையான நீதிபதி குழாமிற்கு முன் பிரசன்னமாகி சொத்துக்களின் நிறைவேற்றம் மற்றும் கடன் மீள் பெருக்கை தொடர்பான அறிமுகப்படுத்தப்பட்ட சட்டத்திற்கு எதிராக வாதிட்டிருந்தார். திரு அமரசேகேர இவ்விரு விடயங்களிலும் வெற்றியடைந்தார், அதாவது உச்ச நீதிமன்றமானது இந்தியாவின் வெற்றிகரமான தீர்ப்பான, கடுமையான, ஒடுக்குகின்ற, மற்றும், அறிவுக்கு உதவாத சட்டங்கள் நீக்கப்படவும், சட்டமானது பலவான்களை மேலும் பலப்படுத்தியும், பெலவீனர்களை மேலும் பெலவீனப்படுத்தவும் முடியாதுள்ளதனை மேட்கோள் காட்டியது.*

*திரு. அமரசேகர நிகழ்காலத்தில் மிகவும் நெருக்கமாக இரு பொது நல நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதையும் நான் அறிவேன், இவை பொது நிறுவனங்களுக்கான பாராளுமன்ற குழுவினால் மோசடியானது என கணிக்கப்பட்ட, காப்புறுதி மற்றும் பதுங்குகுழியின் பாரிய தனியார்மயமாக்கலை இரத்து செய்யும் முகமாக இந்நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார்.*

*இலங்கையின் நீதி ஆணைக்குழுவின் தலைவர் என்ற வகையில், நான் எப்பொழுதும், நிதி மற்றும் வருமானம் தொடர்புடைய வழக்குகள் ஆணைக்குழுவின் முன் கொண்டுவரப்படுகையில் திரு.அமரசேகரவை கலந்தாலோசிப்பேன். திரு அமரசேகர கம்பெனிகள் சட்ட ஆலோசனை ஆணைக்குழுவிலும் ஒரு செயலாற்றும் அங்கத்தினராக காணப்பட்டார். இது 2007 மே இல் புதிய கம்பெனிகள் சட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியதுடன், சர்வதேச பெருநிறுவன சட்டத்திற்கு இசைவாகவும் இது காணப்பட்டது.*

*இக்கடிதத்தினை இவ்வளவு நீளமானதாக எழுத நான் நினைக்கவில்லை. தேசத்தின் நன்மைக்காக நானும் திரு.அமரசேகராவும் இணைந்து தனிப்பட்ட முறையில் பணியாற்றிய சந்தர்ப்பங்களுக்கு மாத்திரம் இக்கடிதத்தினை மட்டுப்படுத்தியுள்ளேன். தேசிய மற்றும் பல்தேசிய நபர்களால் தமது தவறான நடத்தைகள் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பன குறித்து திரு அமரசேகர மிகுந்த ஆழமான அறிவினைக் கொண்டுள்ளார். இவருடைய இந்த திறமை புலன்கள் காணாதவற்றைக் காணும் திறன் உடையது போன்றது. இதனை நான் மேற்குறிப்பிட்ட சிங்கப்பூர் கம்பெனியின் மத்தியஸ்தத்தின் போது உணர்ந்தேன். அவரது கணக்கியலிலான தொழிற்சார் திறமையும், தடயவியலிலான திறமைகளும் சட்டத்துறை தொடர்பான அறிவும் இவரை ஒரு தனித்துவம் வாய்ந்த நபராக அடையாளப்படுத்துகிறது.*

*திரு.அமரசேகேரவின் நேர்மை நிந்தைக்கு அப்பாற்பட்டது.அவரது உயர் நன்னடத்தை குணாதிசயமும்,உயர் கொள்கைகளை கொண்டிருத்தலும் கேள்விகளுக்கு அப்பாற்பட்டது.இவரது இந்த உயர்வான தன்மைகள் நாட்டின் உயர்ந்த நீதிமன்றமான உச்ச நீதிமன்றத்தின் மரியாதையினையும் பெற்றுத்தந்தது. இக்கொள்கைகளே இத்தேசத்தின் மோசடியுடன் இணைந்த ஊழலுக்கு எதிரான காவலாளியாக இவரை அங்கீகரித்தது.*





*கலா.லக்ஷ்மன் மாறசிங்க*
*ஓய்வு பெற்ற சட்ட பேராசிரியர்.*
*வின்ட்சர் பல்கலைக்கழகம்*
*வின்ட்சர்*
*கனடா*

*இன்னர் டெம்பலில்,*
*சட்ட வழக்குரைஞ்சர் (இங்கிலாந்து)*
*அத்துடன், சட்டத்தரணி (இலங்கை),*

*தலைவர், இலங்கை சட்ட ஆணைக்குழு* நவம்பர் 2, 2007

අමරානන්ද සෝමසිරි ජයවර්ධන
ලලිතා ජයවර්ධන

Amarananda Somasiri Jayawardena
Lalitha Javawardena

**அமரானந்த சோமசிரி ஜயவர்தன**
**லலிதா ஜயவர்தன**

***<u>ஆர்வம் உள்ளவருக்காக</u>***

## *<u>நிஹால் ஸ்ரீ அமரசேகர</u>*

*நிஹால் ஸ்ரீ அமரசேகரவை குறித்து எழுதுவது இன்பமானதாகும், பொதுநலன் தொடர்பிலும், பெரிய இலங்கை அரசாங்கங்களின் மனித உரிமைகள் மற்றும் சட்ட ஒழுங்கு தொடர்பிலும், அதிகாரங்கள் நிறைந்த கட்டமைப்புகள் மீதுமான நடவடிக்கைகள் தொடர்பில் செயற்படும் பயமற்ற ஒப்பற்ற ஒருவராவார். தனி நபராக அவர் அநேக காரியங்களை செய்துள்ளார் அவை அனைத்தையும் இந்த குறுகிய குறிப்பில் உள்ளடக்க முடியாது. உண்மையில் நான் அவரது இந்த போராட்டங்கள் தொடர்பில் புத்தகம் ஒன்றினை வெளியிடுமாறு தொடர்ந்தும் அறிவுறுத்தல் கொடுத்து வந்துள்ளேன். நான் அதை செய்து கொண்டிருக்கின்றேன் என்று அவர் கூறுவார், அவர் தனது நோக்கத்தில் குறியாக இருப்பதினால் அது நடந்ததாக தெரியவில்லை.*

*ஒரு இளம் முகாமைத்துவ கணக்காளராக* 1980 *களின் பிற்பகுதியில் அல்லது* 1990*ன் ஆரம்ப காலத்தில், அரசாங்கத்தின் ஊழல் நடவடிக்கைகளை பொது வெளிச்சத்திற்கு கொண்டு வந்து பிரபல்யம் அடைந்ததன் நிமித்தம் இவர் எனது பார்வையில் முதன் முறையாக பட்டார். குறிப்பாக அரசாங்கத்திற்கு பாதகமான விதிமுறைகளை கொண்டிருந்த ஹில்டன் ஹோட்டல் கட்டுமானத்தின் கொடுப்பனவை குறிப்பிடலாம். இவர் இலங்கையின் முதலாவது பிறர் சார்பான வழக்கொன்றினை* 1990*ல் தொடுத்து நீதிமன்றமானது ஜப்பானிய நிர்மாணிப்பாளர்களுக்கு கொடுப்பனவுகளை தடை செய்யும் படியான தீர்ப்பொன்றினை பெற்றார். மேலும் இவர் அரச வருமானத்திற்கு பாரிய இழப்பினை கொண்டு வந்த அரசாங்கத்திற்கு சாதகமான வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட தாராளவாத இறக்குமதி வரி விலக்கினையும் வெளிச்சம் போட்டுக் காட்டினார். மேலும், அரச சொத்துக்களையும் நிறுவனங்களையும் தனியார்மயமாக்கம் செய்தபோது இடம்பெற்ற பாரதூரமான ஒழுக்க விதி மீறல்களையும், வெளிக்காட்டினார், பின்னர் இவை ஊடகங்களால் முன்னுரிமைப்படுத்தப்பட்டன. நிஹாலினுடைய வெளிப்பாடுகள்* 1994*ம் ஆண்டு தேர்தலில் பெரிய பிரச்சினையாக உருவெடுத்ததோடு,அன்றைய அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு காரணமாகவும், ஊழலுக்கு எதிரான போரினை முன்வைத்த சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக தெரிவாவதற்கும் காரணமாக அமைந்தது.*

*நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரும் ஜனாதிபதியுமான புதிய ஜனாதிபதி, என்னை நிதியமைச்சினதும் திறைசேரியினதும் செயலாளராக பதவி ஏற்கும்படி அழைத்தார். இயல்பாகவே நாம் நிஹால் அவர்களை ஒரு விசேட உயர் மட்ட ஆலோசகராக கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற ஊழல் நடவடிக்கைகளை விசாரணை செயும்படியாகஅமைச்சில் இணையுமாறு கேட்டிருந்தோம், விசேடமாக அதிகாரிகள் விதிமுறைகளை மீறியது தொடர்பில் தற்காப்பாக இருந்தார்கள். மீன் நீருக்கடியில் செல்வதை போல அவர் தொன் கணக்கிலான ஆவணங்களை ஆராய்ந்து ஊழல் இடம்பெற்ற பல விடயங்களை கண்டுபிடித்ததோடு, அவற்றிற்கெதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.*

*ஹில்டன் பணித்திட்டமானது, ஒரு பாரிய பிரச்சினையாகும், ஏனெனில்,பெரும்பான்மை உரிமையாளராகவிருந்த அரசாங்கத்திற்கு பாரிய இழப்பு ஏற்பட்டிருந்தது. நிஹால் போதிய ஆதாரங்களை திரட்டியமையானது இந்த ஒப்பந்தத்தை நாங்கள் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்த உதவியாக இருந்தது. இந்த பேச்சுவார்த்தைகளின் போது அதீத திறமைகளோடு இவர் எனக்கு உதவியதுமன்றி, தீங்கான பலவேறு உள்ளடக்கங்களை மாற்றியமைத்து மீண்டும் இலங்கை அரசாங்கத்தின் உரிமைத்துவத்தினை நிலைநாட்டவும் உதவினார். மேலும் அவர் பாதகமான ஓர் ஒப்பந்தத்தின் மூலம் சிங்கப்பூர் கம்பெனியினால் உருவாக்கப்படவிருந்த மா ஆலை ஒப்பந்தம் ஒன்றின் ஒப்பந்தத்தினை மீள் பேச்சுவார்த்தை செய்தபோது எனக்கு உதவினார்.*

*மேலும் இவர், எல்லா தனியார்மயமாக்கல் தொடர்பிலும் வெளிப்படைத்தன்மை இருப்பதற்காக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கும் பொது நிறுவன மறுசீரமைப்பு ஆணைக்குழு (PERC) உருவாக்கத்திற்கான ஆரம்ப கட்ட வேலைகளிலும் எனக்கு உதவியாக இருந்தார். பின்னர் இவர்* PERC *ன் தலைவராக நியமிக்கப்பட்டமையானது அவரது திறமைகளுக்கு மிகப் பொருத்தமான ஒன்றாக அமைந்தது.*

*நான் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக பொறுப்பேற்று* 1995*ல் அமைச்சிலிருந்து விலகிய பின்னரும் அவர் தொடர்ந்தும் அமைச்சோடு இணைந்து வேலை செய்தார். ஆனால் தொடர்ந்தும் அவரோடு நான் தொடர்பில் இருந்ததுமன்றி, பரிமாற்று கட்டுப்பாடுகளில் இடம்பெற்ற குளறுபடிகள் தொடர்பிலான அவர் மேற்கொண்ட விசாரணைகளுக்கு உதவியாக இருந்தேன்.*

*அவர்* 1995*ல் அமைச்சினை விட்டு விலகினாலும், தொடர்ந்தும் அவரது பொதுநல நடவடிக்கைகளை முன்னெடுத்தார், அதில் குறிப்பிடத்தக்க விதமாக, அரசாங்கத்திற்கு வரி நஷ்டத்தை மட்டுமல்லாது, தண்டப்பணம் இன்னும் பல வருமானங்களில் மோசடி செய்த துஷ்டர்களுக்கு கொடுக்கப்பட்ட வரி பொது மன்னிப்பு சட்டத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கினை குறிப்பிடலாம். நீதிமன்றமானது குறித்த பொதுமன்னிப்பானது நாட்டின் சட்டங்களுக்கு முரணானது மட்டுமல்லாது சர்வதேச நடைமுறைகளுக்கும் விரோதமானது என தீர்ப்பளித்தது. பின்னர் அது வாபஸ் பெறப்பட்டது.*

*மிக அண்மையில், 2007ல் சட்டத்திலுள்ள நிதி பொறுப்புகளை மீறும் முகமாகவும், பொது மக்களுக்கு போதிய தகவல்கள் வழங்காமல் குறித்த ஒரு திட்டத்திற்கான நிதியினை இன்னொமொரு திட்டத்திற்கு அதிகாரிகள் மாற்றும்படிக்கான அரசியல் சாசனத்திற்கு முரணான பொருத்தப்பாடு சட்டமூலத்திற்கு (பாதீடு சட்டமூலம்) எதிராக இவர் சவால் விட்டிருந்தார்.*

*ஒரு முன்ணனி கணக்காளராகவும் முகாமைத்துவ ஆலோசகராகவும் செயற்படும் அதேவேளை, நிஹால் அவர்கள் பொதுநலன் சார்ந்த ஊழல் மோசடிகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு எதிராக கணக்கற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எவ்வாறு நேரத்தினையும் சக்தியையும் பெற்றார் என்று நான் வியப்பதுண்டு. இவருக்கு மலை போன்ற தகவல்களை ஆராயக்கூடிய தடயவியல் மற்றும் விசாரணைகள் தொடர்பில் அளவுகடந்த ஆற்றல் காணப்படுவதோடு, நாட்டின் சட்ட திட்டங்கள் தொடர்பில் விசித்திரமான அறிவும் காணப்படுகின்றது. சட்டங்கள் தொடர்பில் இவர் முறையான தகைமையை பெற்றிருக்காத போதிலும், இவரது சட்ட அறிவு குறித்து முன்னணி வழக்கறிஞர்கள் இவரை பாராட்டியதுண்டு.*

*நிஹால் தன்னுடைய இந்த விசாரணிகளின் நிமித்தம் பலமிக்கவர்களோடு முரண்பட்டுக்கொண்டார், எந்தளவு தூரத்திற்கென்றால் நான் அவரது எதிரிகளிடமிருந்து அவரது தனிப்பட்ட பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அவருக்கு ஆலோசனை கூட வழங்கியிருந்தேன். பல மோசடியாளர்கள் நிஹால் தங்களுடைய பாதையில் இருந்து விலகுவதை எதிர்பார்க்கிறார்கள் என்பது முழு நிச்சயம். அதனை தெரிந்துகொண்டும் ஒரு புன்முறுவலோடு அவர் சென்று விடுவார். பொதுச்சேவை என்பது ஒரு நம்பிக்கை அடிப்படியிலானதாகும், என்பதோடு அது எப்போதும் மக்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளது என்பதுதான் அவரை உந்தி வழிகாட்டும் தாரக மந்திரமாகும். அவரை பொறுத்த வரையில் நேர்மை என்பது பொது சேவையின் மூலைக்கல்லாகும். இந்த நம்பிக்கைகள் இவர் தொடர்ந்தும் இப்பணியினை செய்வதற்கான போதிய சக்தியை கொடுக்கிறது. ஒரு தெய்வீக சக்தி அல்லது கர்ம சக்தியானது தன்னை பாதுகாப்பதாக அவர் கருதுகிறார் என்ற எண்ணம் எனக்கு இருக்கின்றது.*




A.S. *ஜயவர்தன*
*ஓய்வுபெற்ற இலங்கை மத்திய வங்கி ஆளுநர்*
*முன்னாள் செயலாளர்- நிதி அமைச்சு*
*முன்னாள் செயலாளர் - திறைசேரி*
*முன்னாள் செயலாளர் - தொழித்துறை விஞ்ஞனாம் மட்டும் தொழிநுட்ப அமைச்சு*
*முன்னாள் பிரதி இயக்குனர் சர்வதேச நாணய நிதியம்*
*முன்னாள் தலைவர் , பொது முகாமையாளர் - இலங்கை வங்கி*
*மத்திய வங்கியாளர்* 1958*லிருந்து*

31,*அக்டோபர்* 2007
89-1,*சுபத்ராராம ஒழுங்கை,*
*நுகேகொட,*
*இலங்கை*
*தொலை* : (941) 2852806
*மின்னஞ்சல்* : asjayawardena@yahoo.com

**K. Kanag-Isvaran,** *President's Counsel*
LL.B. (Lond), of Lincoln's Inn, Barrister
Advocate, Supreme Court of Sri Lanka

104, Isipatana Mawatha,
Colombo 5.
Sri Lanka.
T'phone: (94-11) 2584507 (Residence)
(94-11) 2591655 (Chambers)
Telefax: (94-11) 2586710

*அக்டோபர் 20, 2007*

**<u>ஆர்வம் உள்ளவருக்காக</u>**

திரு. நிஹால் ஸ்ரீ அமரசேகர அவர்கள் எனக்கு நன்கு அறிமுகமானவர்.

அவர் பட்டய கணக்காளர் அமைப்பின் உறுப்பினரும் பட்டயக் கணக்காளர் முகாமைத்துவ அமைப்பின் உறுப்பினரும் ஆவார். இவர் தற்போது முதன்மையாக பாராட்டத்தக்க விதத்தில் முகாமைத்துவம் மற்றும் நிதித்துறையில் ஆலோசகராக பணிபுரிகிறார்.

எனக்கு இவர் முதல் அறிமுகமானது 1990களின் நடுப்பகுதியில், ஒருமுறை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யும் முகமாக என்னிடம் ஆலோசனை பெற வந்த வேளை ஆகும். உரிமை நிறுவனத்தின் பெரும்பான்மையான பங்குகளை இலங்கை அரசாங்கம் வசமிருந்த கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானத்தில் இடம்பெற்ற பாரிய மோசடி தொடர்பிலான வழக்காகும்.

இந்த நடவடிக்கையானது சில ஆண்டுகள் நீடித்ததோடு, இறுதியில் இலங்கை நீதித்துறை வரலாற்றில் முக்கியமானதும் கூட்டுறவு சட்டத்தில் ஒரு மைல்கல்லான தீர்ப்பினையும் பெற்றுத்தந்தது.

இந்தக் காலப்பகுதியில் இவரோடு இடைப்படுவதற்கான போதியளவு சந்தர்ப்பங்கள் எனக்கு கிடைத்திருந்தமையினால் அவரது வாழ்க்கையின் தரிசனத்தையும் நோக்கத்தையும் விளங்கிக் கொள்ள முடிந்தது.

அரச மற்றும் தனியார் துறைகளில் ஊழல் மோசடி உள்ளடங்கலான பொதுநலனை மேம்படுத்தும் பிரச்சினைகள் தொடர்பில் அயராத பயமற்ற ஒரு போராளியாகவும், தனி நபராக செயற்பட்டு இவை தொடர்பிலான வெளிப்பாடுகளையும் அவற்றை இல்லாதொழிக்கும்படியாகவும் ஊடகங்களில் பல்வேறு வெளியீடுகளை செய்ததுமன்றி, இலங்கை அதியுச்ச நீதிமன்றங்களில் பொதுநல வழக்குகளையும் தொடுத்திருந்தார். அவைகள் எல்லா சந்தர்ப்பங்களிலும் அவராலேயே நிதியிடப்பட்டன.

சமூகத்திலிருந்து ஊழலையும் மோசடியையும் துப்பரவு செய்யவேண்டும் என்ற ஆர்வத்தின் நிமித்தம் நீண்ட நேரங்கள் இவர் உழைத்து எந்தவொரு கல்லும் திரும்பாமல் இருப்பதற்கு இடமளிக்காமல்,இவை தொடர்பில் இவர் மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளும் பூரணமானதாக அமைத்திருந்தது.

இவர் தெளிவான அறிவும் கூர்மையான எண்ணமும் கொண்டுள்ளமையானது,,எந்தவொரு குற்றங்கள் தொடர்பிலும் விசாரணை செய்து பெரிய தகவல்களையும் ஊடறுத்து பிரச்சினையின் மூலத்தினை கண்டுபிடித்து அவற்றை இல்லாதொழிக்கும் முகமாக அவற்றிற்கான பதில்களையும் கண்டு கொள்வதில் அவருக்கு உதவியாக இருக்கிறது.

இவர் மிகத்திறமையான தொழில் திறன்களை கொண்டுள்ளதோடு,அதனை நேர்மையோடும் ஏற்றுக்கொள்ளலோடும் பொறுப்பேற்கிறார். இதற்கு நான் தனிப்பட்ட்ட முறையில் சாட்சி பகருகிறேன் ஏனெனில் கடந்த 17 வருடங்களில் பல்வேறு சட்ட விடயங்களில் அவர் என்னோடு கடமை புரிந்துள்ளார்.

அவர் ஒரு களங்கமில்லாத நபராக இருக்கின்றார்.



நான் அவரை முன் மொழிகிறேன்

**K . கனக் - ஈஸ்வரன்**
*ஜனாதிபதி சட்டத்தரணி*
*ஆணையாளர், சட்ட ஆணைக்குழு, இலங்கை*